# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI

## DEPOSITION OF WITNESS

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

CC.No. 23/2025 DATE: 06.03.2026

**அ.சா.4**

| | | | |
|---|---|---|---|
| Name | : **மணி** | Father's Name | : |
| District | : **சேலம்** | Taluk | : |
| Village | : | Calling | : **சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்** |
| Religion | : **இந்து** | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.03.2026.

**(எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்).**

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்ட மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிசெய்து வருகிறேன். திரு.வெங்கடேஷ்பிரபு, காவல் உதவி ஆய்வாளர் பணியிடம் மாற்றம் பெற்று சென்று விட்டதாலும், சாட்சிகள் பிறழ்சாட்சிகளாக மாறிவிட்டதாலும், கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 28.09.2023 ம் தேதி காலை 06.00 மணிக்கு, நிலைய அலுவலில் மகுடஞ்சாவடி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் திரு. ரவுத்திரி வெங்கடேஷ், அவர்கள் இருந்தபோது, சுரேஷ்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகாரின் பேரில் மகுடஞ்சாவடி காவல் நிலைய குற்ற எண்.345/2023, சட்டப்பிரிவுகள் 279, 304(A) இதச–வின் படி முதல்

தகவல் அறிக்கை பதிவு செய்தும், முதல் தகவல் அறிக்கையை வாதியின் புகாருடன் இணைத்து, கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.2, சங்ககிரி அவர்களுக்கு அனுப்பி வைத்தும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்து இவ்வழக்கு கோப்பை புலன் விசாரணை அதிகாரி பார்வைக்கு வைத்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2) பின்னர், இவ்வழக்கு கோப்பை விசாரணைக்கு எடுத்து கொண்ட புலன் விசாரணை அதிகாரி கடந்த 28.09.2023, காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் தங்கராஜ், சுரேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, அவர்களிடம் தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3) பின்னர், சம்பவ இடத்தில் இருந்த கண்ணுற்ற சாட்சிகள் பாபு அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர், அன்றைய தினமே, சேலம் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து இறந்துபோன ஆறுமுகம் என்பவரின் பிரேதத்தின்மீது பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் குமார், சரவணன், சதீஸ், சங்கர், கோவிந்தராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேதத்தை இறப்பின் மருத்துவர் ரீதியான காரணத்தை அறியும்பொருட்டு பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் மனுவை அனுப்பி வைத்துள்ளார். மேலும் மேல்விசாரணைக்காக கோப்பை காவல் ஆய்வாளர் பார்வைக்கு

வைத்துள்ளார். மேற்படி வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்ட காவல் ஆய்வாளர் சாட்சிகளை விசாரணை செய்தததில் ஏற்கனவே சொன்ன வாக்குமூலம் சரியாக இருந்ததால் புதிதாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை.

4) பின்னர், இவ்வழக்கில் எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார். மேலும், கடந்த 27.09.2023ம் தேதி, இவ்வழக்கில் விபத்தை ஏற்படுத்திய வாகனமான TN 11 AV 0788 என்ற பதிவு எண் கொண்ட Kia Motor Car வாகனத்தை சங்ககிரி மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்காக அனுப்பி வைத்துள்ளார். பின்னர், கடந்த 05.10.2023ம் தேதி, மோட்டார் வாகன ஆய்வாளர், சங்ககிரி திருமதி.புஷ்பா என்பவரை விசாரித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றும், அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

5) பின்னர், அன்றைய தினமே இறந்துபோன ஆறுமுகம் என்பவருக்கு பிரேத பரிசோதனை சான்று வழங்கிய சேலம் அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி.சிவசங்கரி என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை சான்று பெற்று அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும், பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

6) மேலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் திரு. ரவுத்திரி வெங்கடேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் புலன் விசாரணையை

முடித்து எதிரி மீது கடந்த 28.10.2023ம் தேதி, சட்டப்பிரிவுகள் 279, 304(A) இதச–வின் கீழ் குற்ற இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால், சரியல்ல. இறந்துபோன நபரின் குடும்பத்திற்கு இழப்பீடு பெற்று தரும் நோக்கத்தில் இவ்வழக்கின் அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், அ.சா.1 னிடம் பொய்யாக புகாரை பெற்று குற்ற இறுதி அறிக்கையை வழக்கின் புலன் விசாரணை அதிகாரி தாக்கல் செய்துள்ளார் என்றும் எதிரி குற்றமற்றவர் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை.

Witness -

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/- D. Sivakumar

Judicial Magistrate No.II,
Sankari.